**தித்வா அனர்த்த நிலைமை காரணமாக மத்திய மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சேதங்களை சீரமைப்பதற்குத் தேவையான மேலதிக பணியாளர்களுக்காக, தொழில்நுட்ப சேவையின் (சிவில்) பதவிகளில் கடமையாற்றி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் – 2026**

தித்வா அனர்த்த நிலைமை காரணமாக மத்திய மாகாண சபையின் கீழுள்ள நிறுவனங்களினால் பராமரிக்கப்பட்டு வரும் பௌதீக வளங்களுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை சீர்செய்வதற்குத் தேவையான தற்காலிக பணியாளர்களை இணைத்துக்கொள்வதன் அடிப்படையில், தொழில்நுட்ப சேவையின் (சிவில்) விசேட தரம் அல்லது தரம் I பதவிகளில் கடமையாற்றி ஓய்வுபெற்ற, உத்தியோகத்தர்களை பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 03/2018 மற்றும் பொதுச் சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல. 03/2019 ஆகியவற்றின் ஏற்புகளுக்கமைய ஒப்பந்த அடிப்படையில் பதவியமர்த்துவதற்கான விண்ணப்பங்கள் இத்தால் கோரப்படுகின்றன.

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.06.22 ஆகும்.**

1. **பொதுத் தகைமைகள் :-**

1.1. தொழில்நுட்ப சேவையின் (சிவில்) விசேட தரம் அல்லது தரம் I பதவியொன்றில் கடமையாற்றி ஓய்வுபெற்ற உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.

1.2. ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் 2026.12.31 ஆம் திகதிக்கு 65 வயதிற்கு மேற்படாதவராக இருத்தல் வேண்டும்.

1.3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.4. இலங்கையின் எந்தவொரு பிரதேசத்தில் வசிப்பவருக்கும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

2. **ஆட்சேர்ப்பு செய்வதற்கான நிபந்தனைகள் :-**

2.1. ஓய்வுபெற்ற அரச அலுவலர்களை மீள சேவையில் ஈடுபடுத்தல் எனும் தலைப்பிலான அரச நிருவாகச் சுற்றறிக்கை 03/2018 மற்றும் பொதுச் சேவைகள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல. 03/2019 ஆகியவற்றின் ஏற்புகளுக்கமைய இவ் ஒப்பந்த அடிப்படையிலான ஆட்சேர்ப்புகள் அமையப்பெறும்.

2.2. விண்ணப்பிக்கும் அனைத்து ஓய்வுபெற்ற அரச அலுவலர்களும் ஒப்பந்த அடிப்படையில் மீள சேவையில் அமர்த்தப்படுவார்கள் எனக் கருதலாகாது.

2.3. இந்நியமனம் 2026.12.31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு மேற்கொள்ளப்படுவதுடன், பணித் தேவைகளின் அடிப்படையில் இக்கால எல்லை நீடிக்கப்படலாம்.

3. **சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்:-**

3.1. விண்ணப்பதாரியின் சுயவிவரக்கோவை

3.2. இங்கு இணைப்பு இல. 01 இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள EST – 09 படிவம்

3.3. இங்கு இணைப்பு இல. 02 இன் மூலம் குறிப்பிடப்பட்டுள்ள பொது நிர்வாகச் சுற்றறிக்கை இல. 03/2018 இலுள்ள ஓய்வுபெற்ற அரச அலுவலர்களை மீள சேவையில் அமர்த்துவதற்கான பரிந்துரைப் படிவம். இதனை குறித்த உத்தியோகத்தர் ஓய்வுபெறும் போது பணியாற்றிய நிறுவனத்திற்குரிய நிறுவனத் தலைவர்களின் (அமைச்சின் செயலாளர்/ திணைக்களத் தலைவர்/ நிறுவனத் தலைவர்) பரிந்துரைகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும்

3.4. பிறப்புச் சான்றிதழின் மூலப்பிரதி

3.5. தேசிய அடையாள அட்டையின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி

3.6. மீளசேவையில் அமர்த்தப்படும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், குறித்த பதவியில் பணியாற்றுவதற்குப் போதுமான உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டுள்ளார் என்பதனை உறுதிப்படுத்தும் அரசாங்க வைத்திய அதிகாரி ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட மருத்துவச் சான்றிதழின் மூலப்பிரதி (இணைப்பு இல. 03)

3.7. ஓய்வுபெறச் செய்தல் கடிதத்தின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி

4. சம்பள அளவுத்திட்டம்

4.1 ஓய்வுபெற்ற அரச அலுவலர்களை மீள சேவையில் ஈடுபடுத்தல் எனும் தலைப்பிலான அரச நிருவாகச் சுற்றறிக்கை 03/2018 இன் ஏற்பாடுகளுக்கு அமைய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும்.

5. மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு **2026.06.22** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "தித்வா அனர்த்த நிலைமை காரணமாக மத்திய மாகாணத்தில் ஏற்பட்டுள்ள சேதங்களை சீரமைப்பதற்குத் தேவையான மேலதிக பணியாளர்களாக, தொழில்நுட்ப சேவையின் (சிவில்) பதவிகளில் கடமையாற்றி ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல் – 2026" எனக் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும், முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

6. இவ்வறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள / வெளியிடப்படாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பிக்கும் எண்ணிக்கைத் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்குரியதாகும். மேலும், இந்த அறிவிப்பில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் விடயம் இருப்பின், அது குறித்து தெளிவுபடுத்துவது / முடிவெடுப்பது மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் பொறுப்பாகும்.

7. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக,
செயலாளர்,
மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை.

2026 ஜூன் மாதம் 05 ஆம் திகதி,
மத்திய மாகாண அரச சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி